නැෂනල් පේපර් කොම්පැනි ලිමිටඩ්

நேஷனல் பேப்பர் கம்பெனி லிமிடட்

National Paper Company Limited



NPCL

වාර්ෂික වාර්තාව

ஆண்டு அறிக்கைகள்

Annual Report

2014 - 2015

කර්මාන්ත අමාත්‍යාංශය

தொழில்துறை அமைச்சகம்

Ministry of Industries

වාර්ෂික වාර්තා, ගිණුම් ප්‍රකාශණ සහ ස්වාධීන විගණන වාර්තා

නැෂනල් පේපර් කොම්පැනි ලිමිටඩ්

වාර්ෂික වාර්තාව

2015.03.31 දිනෙන් අවසන් වන වසර සඳහා

INDEX

අන්තර්ගතය **පිටු අංක**

1. සභාපතිතුමාගේ පණිවුඩය 01

2. වර්තමාන අධ්‍යක්ෂක මණ්ඩලය 2022 03

3. දැක්ම සහ මෙහෙවර 05

4. 2015.03.31 දිනෙන් අවසන් වසර සඳහා මූල්‍ය ප්‍රකාශන
   4.1 සංස්ථාපිත තොරතුරු 09
   4.2 අධ්‍යක්ෂවරුන්ගේ වාර්ථාව 10
   4.3 විගණකවරුන්ගේ වාර්ථාව සහ මූල්‍ය ප්‍රකාශන 11

உள்ளடக்கம் **பக்க இல.**

1. தலைவரின் செய்தி 01

2. பணிப்பாளர் குழாத்தினர் 2022 03

3. இலக்கு மற்றும் நோக்கக் கூற்று 05

4. 2015 மார்ச் 31 உடன் முடிவடையும் வருடத்துக்கான நிதிக் கூற்றுக்கள் பொருளடக்கம்
   4.1 கூட்டிணைக்கப்பட்ட தகவல்கள் 09
   4.2 பணிப்பாளர்களின் அறிக்கை 10
   4.3 கணக்காய்வாளர்களின் அறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்கள் 11

Contents **Page No.**

1. Message from the Chairman 01

2. Incumbent Board of Directors 2022 03

3. Vision & Mission 05

4. Financial Statements for the Year Ended 31 March 2015
   4.1 Corporate information 09
   4.2 Report from the Directors 10
   4.3 Auditors' Report and Financial Statements 11

நெஷனல் பேப்பர் கம்பனி லிமிடட்

ஆண்டறிக்கைகள்

2014 – 2015

தொழிற்துறை அமைச்சு

நெஷனல் பேப்பர் கம்பனி லிமிடட்

ஆண்டறிக்கைகள்

2015.03.31 உடன் முடிவடையும் வருடத்துக்கானது



தலைவரின் செய்தி

வரையறுக்கப்பட்ட இலங்கைக் கடதாசிக் கூட்டுத்தாபனம் என்னும் பெயரில் இலங்கையில் கடதாசிக் கைத்தொழிலின் முன்னோடி எனப் பெயர் பெற்று 1956 முதல் இன்று வரை 7 தசாப்தங்களாக இலங்கையின் கடதாசித் தேவையை பூர்த்திசெய்து மிகப்பெரிய சேவையினை வழங்கிய இந்நிறுவனம் 1992 ஆம் ஆண்டு ஓர் அரச நிறுவமாகப் பதிவுசெய்யப்பட்டதோடு 1995, 1996 ஆம் ஆண்டுகளில் தேசிய உற்பத்தித்திறன் விருதினையும் சொந்தமாக்கிக்கொண்ட ஒரு நிறுவனமாகும்.

நான் உட்பட என்னுடைய முகாமைத்துவக் குழுவினர் 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இந்நிறுவனத்தின் நிர்வாகிகளாக நியமிக்கப்படும்போது வாழைச்சேனை மற்றும் எம்பிலிப்பிட்டிய ஆகிய இரு தொழிற்சாலைகளும் செயலிழந்து காணப்பட்டதோடு, 2016 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட சுயேச்சை ஓய்வூதிய இழப்பீட்டுத் திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட சிலரைத் தவிர அநேகமான ஊழியர்கள் ஓய்வூபெற்றனர். இவ்வாறு கடதாசிக் கைத்தொழில் பின்னடைவுற்றிருந்த காலப்பகுதியில் கடதாசிக் கைத்தெழிலை சுய நிதியிடல் திட்டத்தின் கீழ் மீண்டும் ஸ்தாபிப்பதன்பொருட்டு என்னிடம் வழங்கப்பட்ட சவாலை நான் மிகவும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டேன்.

இற்றைவரைக்கும் தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் 2012 ஏப்ரல் முதல் 2015 மார்ச் மாதம் வரையான கணக்காய்வு நிதிக்கூற்றுக்கள் காணப்பட்டபோதும் அவை வருடாந்த ஆண்டறிக்கைகளாக தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்படாமையும் 2015 ஏப்ரல் மாதம் முதல் வருடாந்த கணக்கறிக்கை தயாரிக்கப்படாமையும் நாம் எதிர்கொண்ட மற்றுமொரு சவாலாகும். 2020 ஆம் ஆண்டு முதல் வருடாந்த இறுதிக் கணக்கறிக்கை மற்றும் வருடாந்த ஆண்டறிக்கை என்பன முறையாக தாயரிக்கப்பட வேண்டிய நிலையில் கடந்த கால தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மிகக் குறுகிய காலப்பகுதயில் 2012 முதல் 2015 வரையான காலப்பகுதிகளுக்கான ஆண்டறிக்கைகளை இவ்வாறு தயார்செய்து முன்வைப்பது என்னுடைய பதவிக் காலத்திற்குள் நான் ஏற்றுக்கொண்ட ஒரு மாபெரும் பொறுப்பாகக் காணப்படுகின்ற அதேவேளை, எம்மிடம் காணப்பட்ட தரவுகளை அடிப்படையாகக்கொண்டு அறிக்கை தயாரித்து இவ்வாறு முன்வைப்பது தொடர்பில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த காலங்களில் காணப்பட்ட சகல தங்குதடைகளையும் தாண்டி போட்டிமிக்க சந்தையில் மீண்டும் தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் ஏகாதிபத்தியத்தை நிலைநிறுத்துவதற்குத் தேவையான அனைத்து தீர்மானங்களையும் மேற்கொண்டு எந்நேரமும் என்னை தையரியமூட்டி தேவையான சகல ஒத்துழைப்புக்களையும் வழங்கிய கௌரவ ஜனாதிபதி அவர்கள், கௌரவ பிரதமர் உட்பட அவர்களது முழு ஊழியர் குழாத்திற்கும் அவ்வாறே திறைசேரியின் முழு ஊழியர் குழாத்திற்கும் என்னுடைய மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அவ்வாறே எமது நிறுவனத்தின் செயற்பாடுகளை முறையாக மேற்பார்வைசெய்து எமக்குத் தேவையான அனைத்து அறிவுரைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி எம்முடன் நம்பிக்கையுடன் செயற்படுகின்ற எமது அமைச்சின் செயலாளர் உட்பட அனைத்து ஊழியர் குழாத்திற்கும் அவ்வாறே, எதிர்காலத்தில் தேசிய கடதாசித் தேவையினை பூர்த்திசெய்வதற்கு எப்போதும் எமது கூட்டுத்தாபனத்திற்கு சக்தியாக இருக்கின்ற எமது கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவக் குழுவினரை இச்சந்தர்ப்பத்தில் அன்போடு நினைவுகூர்கின்ற அதேவேளை, இக்கூட்டுத்தாபனத்தின் முன்னோடிகள் என்ற அடிப்படையில் இப்போது என்னுடன் கைகோர்த்து, தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் எதிர்கால வெற்றியின்பொருட்டு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற இக்கூட்டுத்தாபனத்தின் அனைத்து ஊழியர் குழாத்தினரையும் நான் இச்சந்தர்ப்பத்தில் பெருமகிழ்ச்சியோடு நினைவுகூர்கின்றேன்.

விமல் ரூபசிங்க
தலைவர்
தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம்

2022

தலைவர் உட்பட பணிப்பாளர் குழாத்தினர



கே.ஏ.விமல் ரூபசிங்க அவர்கள்
தலைவர்



திருமதி. ருவினி சேனாரத்ன
பணிப்பாளர்



திரு. ஜே.பீ.ஹீன்கெந்த
பணிப்பாளர்



திரு. தினுந்து முனிதாச
பணிப்பாளர்



திரு. எஸ்.எஸ்.கெடவெலகெதர
பணிப்பாளர்



திருமதி. எம்.டீ ஹிமாலி சீ விஜேதுங்க
பணிப்பாளர்



திரு. ஜீ.பீ.எஸ்.எஸ். வீரசூரிய
பணிப்பாளர்

கூட்டிணைக்கப்பட்ட இலக்கு மற்றும் நோக்கக் கூற்று

எமது இலக்கு

இலங்கையின் கடதாசிக் கைத்தொழிலின் விருத்திக்கு பங்களிப்பு செய்வதன் பொருட்டு, தற்போது இலங்கையில் உற்பத்திசெய்யப்படாத அச்சுத் தாள்கள், நிழற்பிரதி தாள்கள், கணினி காகிதாதிகள் போன்ற கடதாசி மற்றும் அட்டைகள் (Board) உற்பத்தி தொடர்பில் இலங்கையில் சந்தைப்படுத்தலில் முன்னோடிகளாகத் திகழ்தல்

எமது நோக்கக் கூற்று

அதிக இலாபம் தரக்கூடிய சூழலுக்கு பங்கம் ஏற்படாத வகையில் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடக்கூடியவர்களை அடிப்படையாகக் கொண்டு தொழிநுட்பம், மனித வளம் மற்றும் சிறப்பான முகாமைத்துவம் என்பன காணப்படுகின்ற அனைத்து வகையான கடதாசிகள் மற்றும் அட்டைகளை (board) உற்பத்தி செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல் என்பவற்றில் முற்றிலும் புத்தாக்கத்தையும் பல்வகைமையையும் ஏற்படுத்திய கடதாசிக் கூட்டுத்தாபனமாகத் திகழ்தல்

வரையறுக்கப்பட்ட இலங்கை கடதாசிக் கூட்டுத்தாபனம்

உள்ளடக்கம்

2014 / 2015 நிதி வருடம்

1. கூட்டிணைக்கப்பட்ட தகவல்கள்
2. பணிப்பாளர்களின் அறிக்கை
3. கணக்காய்வாளர்களின் அறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்கள்

வரையறுக்கப்பட்ட இலங்கை கடதாசிக் கூட்டுத்தாபனம்

கூட்டிணைக்கப்பட்ட தகவல்கள்: 2014 / 2015

பொறுப்பதிகாரி: - திரு. மங்கள சீ செனரத்

கூட்டுத்தாபன செயலாளர்கள்

தயானந்த சமரவிக்கிரம மற்றும் கூட்டுத்தாபனம்

பட்டயக் கணக்காளர்கள்

இல 20/26, புகையிரத நிலைய ஒழுங்கை

(ஜனத்தா பொல வீதி)

நுகேகோடை, இலங்கை

பதிவுசெய்யப்பட்ட காரியாலயம்

இல.93 ஜாவத்தை வீதி

கொழும்பு – 05

கணக்காய்வாளர்கள்

அன்ஸ்ட் என்ட் யன்ங்

பட்டயக் கணக்காளர்கள்

இல 201, த சேரம் இடம்

த.பெ.இல: 101

கொழும்பு 10

இலங்கை

வங்கிதாரர்கள்

மக்கள் வங்கி

இலங்கை வங்கி

தேசிய அபிவிருத்தி வங்கி

பணிப்பாளர்களின் அறிக்கை

வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் குழாத்தின் மூலம் 2015.03.31 இல் முடிவடையும் வருடத்துக்கான கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளுடன் கூடிய ஆண்டறிக்கையினை இவ்வாறு முன்வைக்கின்றனர்.

1. பிரதானமாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

கூட்டுத்தாபனத்தில் பிரதானமாக மேற்கொள்ளப்படும் செயற்பாடாவது, கடதாசி மற்றும் கடதாசி அட்டைகளை (Paper boards) வாழைச்சேனை தொழிற்சாலையில் உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவதாகும்.

2. மூலதனப் பங்கு

வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம் திறைசேரியின் செயலாளரின் 100மூ பங்கு உரிமைகளைக் கொண்ட அரசுக்குச் சொந்தமான ஒரு வியாபார ஒன்றியமாகும். இங்கு மூலதனப் பங்கு 323 மில்லியனாகும். (அவ்வாறாயின் மூலதனப் பங்கு 10% அடிப்படையில் பங்கு 32,300,000 இற்கு சமனாகும்.)

3. மொத்த விற்பனை

2015.03.31 ஆம் திகதியுடன் முடிவடையும் கணக்கு வருடத்தின் நிறுவனத்தின் தேறிய மொத்த விற்பனை ரூபா 74,905 மில்லியனாகும்.

4. கூட்டுத்தாபனத்தின் உற்பத்திச் செலவுகள்

கருத்திற்கொள்ளப்பட்ட காலப்பகுதிக்குள் வாழைச்சேனை தொழிற்சாலையின் உற்பத்தி செலவுகள் ரூபா 243,118 மில்லியன் ஆகும்.

5. மூலனச் செலவுகள்

வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம் மறுகட்டமைப்புக்கு உட்படுத்தப்பட்ட நாள் தொடக்கம் அதன் மூலதனச் செலவுகள் மிகக் குறைந்த அளவில் மட்டுப்படுத்தப்பட்டது.

6. கூட்டுத்தாபனம் தொடர்பிலான ஒப்பந்தங்களை அணுகுவதற்கு பணிப்பாளர்கள் காட்டிய விருப்பு

2015.03.31 உடன் முடிவடைந்த வருடத்தில் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கூட்டுத்தாபனத்துடன் ஒப்பந்தங்களை மேற்கொள்ள முடியாது.

7. கணக்காய்வாளர்கள்

கூட்டுத்தாபனத்தின் 2015.03.31 உடன் முடிவடைந்த வருடத்தில் நிதிக் கூற்றுக்கள் பட்டயக் கணக்காளர்களான அன்ஸ்ட் என்ட் யங்ங் என்னும் கூட்டுத்தாபனத்தின் மூலம் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன.

வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம்

நிதிக் கூற்றுக்கள்

2015 மார்ச் 31

EY
சிறந்த வேலை
உலகைக்
கட்டி
எழுப்புவோம்
இலங்கை.

Ernst &Young
பட்டயக் கணக்காளர்
இல, 201, சரம்
பிளேஸ், த.பெ.
இல. 101, கொழும்பு 10

தொலைபேசி : 94 11 2463500
பக்ஸ் : 94 11 2697369
ரக்ஸ் : 94 11 5578180
eysl@lk.com
ey.com

PNS/KAVS/JJ

சுயாதீனக் கணக்காய்வாளர்களின் அறிக்கை
வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கூட்டுத்தானத்தின் பங்குதாரர்களுக்கானது

வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு செய்ய நாங்கள் உடன்பட்டுள்ளோம் (கம்பனி). அத்தகைய நிதிக் கூற்றுக்களானது 2015 மார்ச் 31 இல் உள்ளவாறான வருடத்துக்கான நிதி நிலைமைக் கூற்றுக்களை உள்ளடக்கியுள்ளதுடன், முடிவடைந்த வருடத்துக்கான இலாப நட்டக் கூற்றுக்கள், ஒப்புரவு மாற்றக் கூற்றுக்கள், காசுப் பாய்ச்சற் கூற்றுக்கள், மற்றும் ஏனைய விளக்கமான தகவல்கள் என்பனவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புடமைகள்

இலங்கைக் கணக்கியல் நியமங்களுக்கு ஏற்ப இத்தகைய நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து அவற்றைச் சமர்ப்பிப்புச் செய்வது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். இத்தகைய பொறுப்புடமைகளின் கீழ் வடிவவமைத்தல், நடைமுறைப்படுத்தல், கூற்றுக்கள் தவறானவையானதாகவோ அல்லது மோசடியானதாகவோ இருந்தாலும் மூலப்பொருள் முரண்கூற்றிலிருந்து சுயாதீனமான கணக்குக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றைச் சமர்ப்பிப்புச் செய்தல் என்பவற்றுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகளை நிர்வகித்தல், பொருத்தமான கணக்கியல் கொள்கைகளைத் தெரிவுசெய்தல் மற்றும் பிரயோகித்தல், மற்றும் சூழ்நிலைகளுக்குப் பொருந்தக்கூடிய கணக்கியல் மதிப்பீடுகளைச் செய்தல் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

கணக்காய்வாளரின் பொறுப்புடமை

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் அடிப்படையில் கணக்காய்வினை நடாத்தி நிதிக் கூற்றுக்கள் தொடர்பான அபிப்பிராயங்களை வெளிப்படுத்துவது எங்களது பொறுப்பாகும். ஏனெனில் அபிப்பிராய மறுப்புக்கான காரணிகளின் அடிப்படை விபரிக்கப்பட்ட பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு, கணக்காய்வின் அடிப்படையான அபிப்பிராயங்களை வழங்குவதற்கான போதுமான கணக்காய்வு ஆவணங்களை எங்களால் பெறமுடியாதிருந்தது.

அபிப்பிராய மறுப்புக்கான அடிப்படைகள்

01. 2014 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்துக்கான கம்பனியின் நிதிக் கூற்றுக்களை ஆய்வு செய்த வேறொரு கணக்காய்வாளரினால் 2017 பெப்ரவரி 02 இல் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக

எதிரிடையான அபிப்பிராயங்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எதிரிடையான அபிப்பிராயங்களுக்கு அடிப்படையாக விபரிக்கப்பட்ட ஆரம்ப மீதி மற்றும் காரணங்களுக்கான பொருத்தப்பாடு தொடர்பாக போதிய பொருத்தமான கணக்காய்வு ஆவணங்களை எங்களால் பெறமுடியாதிருந்தது.

02. வாழைச்சேனை ஆலைக்குரிய வளாகம் மற்றும் பொருத்தமான பதிவுகள் என்பவற்றுக்கான பௌதீக அணுகலை நாங்கள் அனுமதிக்காததுடன் கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான மீதிகளுக்கான மீளாய்வுக்குரிய போதுமான தகவல்கள் எங்களுக்கு வழங்கப்படவில்லை.

மேலும், எம்பிலிப்பிட்டிய ஆலையானது 2011 நவம்பர் 15 ஆம் திகதி AUS லங்கா கடதாசிக் கம்பனிக்கு விற்கப்பட்டிருந்தபோதும் எங்களது மீளாய்வுக்காக விற்பனை உடன்படிக்கையோ அல்லது ஏதாவது போதுமான தகவல்களோ வழங்கப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளவாறு எங்களால் மீதிகளைச் சரிபார்க்க முடியாதிருந்தது.

விபரணம்	எம்பிலிப்பிட்டிய '000'	வாழைச்சேனை '000'
மொத்த நடைமுறை அல்லாத சொத்துக்கள்	17,886	38,344
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்	11,202	177,767
மொத்த நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்	483,757	406,086

03. தலைமை அலுவலகத்தில் பதியப்பட்டுள்ள மீதிகள் தொடர்பானது

3.1. சொத்துக்கள், பொறிகள், உபகரணங்கள் தொடர்பான முறையான பதிவுகள் பேணப்படவில்லை. ரூபா 33,376,922 பெறுமதியான சொத்துக்கள், பொறிகள், உபகரணங்கள் தொடர்பாக நிதிக் கூற்றில் பதிவுசெய்யப்பட்ட மீதி தொடர்பாக எங்களால் சரிபார்க்க முடியாதிருந்தது.

3.2. நாங்கள் 2016 டிசம்பர் 23 ஆம் திகதி குறித்த நிதியாண்டினைத் தொடர்ந்து கம்பனியினது கணக்காய்வாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளோம். அத்துடன் ஆண்டின் இறுதியில் பௌதீக ரீதியிலான பொருட் பட்டியல் கணக்கெடுப்பினை அவதானிக்க முடியவில்லை. மேலும், நிதி நிலைமைக் கூற்றின்படியான ரூபா 15,926,363 பெறுமதி மற்றும் பொருட் பட்டியல் அளவு தொடர்பான கணக்குப் பதிவுகள் கம்பனியினால் முறையாகப் பேணப்படவில்லை.

3.3 நேரடியான உறுதிப்படுத்தல்களைப் பெறுவதிலிருந்து நாங்கள் தடுக்கப்பட்டிருந்ததுடன் நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பபட்டிருந்த விற்பனை மற்றும் வருமதிகள், விற்பனை மற்றும் சென்மதிகள் தொடர்பிலான பெறுமதிகளைச் சரிபார்ப்பதற்கான முறையே ரூபா 257,200,355 மற்றும் ரூபா 471,307,505 தொடர்பிலான போதிய தகவல்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

3.4 நிதி நிலைமைக் கூற்றுக்களில் தெரிவிக்கப்பட்டுள்ள மூலதன ஒதுக்கம் மற்றும் வெளிநாட்டு மானியங்கள் தொடர்பிலான பெறுமதிகளைச் சரிபார்ப்பதற்கான முறையே ரூபா 45,087,534 மற்றும்

ரூபா 41,777,052 தொடர்பிலான போதுமான மற்றும் பொருத்தமான ஆவணங்கள் எங்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும் வருமான ஒதுக்கத்தில் வரவு வைக்கப்பட்டிருந்த பெறுமதி ரூபா 103,258 தொடர்பிலான போதுமான மற்றும் ஏற்றுக் கொள்ளக்கூடிய விகிதத்திலான தகவல்கள் எங்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

3.5 நிதி நிலைமைக் கூற்றில் தெரிவிக்கப்பட்டிருந்த ரூபா 159,654,648 பெறுமதியான வெளிநாட்டுக் கடன்கள் தொடர்பாக நேரடி உறுதிப்படுத்தல்களிலிருந்து நாங்கள் தடுக்கப்பட்டிருந்ததுடன் எங்களது கடன் தொடர்பான மீளாய்வுக்காக கடன் உடன்படிக்கையோ அல்லது அது தொடர்பிலான போதிய தகவல்களோ எங்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

3.6 அறிக்கைப்படுத்தும் திகதியன்று கம்பனியானது ரூபா 110,681,254 பெறுமதியான சென்மதிப் பணிக் கொடையினைப் பதிவு செய்திருந்ததுடன் ஏற்பாடுகளின் அடிப்படையில், நடப்பு ஆண்டுக்குரிய கொடுப்பனவுகள் தொடர்பாக போதுமான தகவல்கள் எங்களது மீளாய்வுக்காக வழங்கப்பட்டிருக்கவில்லை.

3.7 நிதி நிலைமைக் கூற்றில் பதிவுசெய்யப் பட்டிருந்த ரூபா 74,905,615 மற்றும் ரூபா 243,140,251 பெறுமதியான முறையே வருமானவரி மற்றும் விற்பனைச் செலவுகளினது பூரணப்படுத்தல்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் மற்றும் கணக்காய்வுச் செயன்முறைக் குறைபாடுகள் காரணமாக எங்களால் சரிபார்க்க முடியாதிருந்தது.

3.8 VAT, NBT, ESC போன்ற சட்டரீதியான வரிகளுக்கு கம்பனியானது பொறுப்புடைமையுள்ளது. எவ்வாறெனினும் கம்பனியானது அவ்வாறான காலாவதிக் கொடுப்பனவுகள் அல்லது அவற்றைச் செலுத்துவதற்குரிய போதுமான வழங்கல்களை நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கம்பனி செலுத்தியதை நிச்சயப்படுத்துவதற்குத் தேவையான பொருத்தமான கணக்காய்வு ஆவணங்களை எங்களுக்கு வழங்கியிருக்கவில்லை.

3.9 போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு ஆவணங்கள் இல்லாத காரணத்தினால் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளவாறு இலாப நட்டக் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருந்த செலவீனங்களை எங்களால் சரிபார்க்க முடியாதிருந்தது.

தேய்மானம்	**தொகை (ரூபா)**
சம்பளம் மற்றும் கூலி	20,705,764
ஊழியர் சேமலாப நிதியம்	528,085
ஊழியர் நம்பிக்கை நிதியம்	2,112,340
வாடகை, விழுக்காடுகள்,வரிகள்	3,756,229
ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர் கொடுப்பனவுகள்	1,440,467
வாகன வாடகை	1,035,000
பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு	2,852,751
கழிவுக் கடதாசிச் செலவுகள்	3,222,458

1 இலிருந்து 3.9 வரையான மேலே விபரிக்கப்பட்டுள்ள விடயங்களுக்கான மாற்றீடுகள் என்பது தொடர்பில் எங்களால் திருப்திப்பட முடியாதுள்ளது. மேலும் கம்பனியினது தொடர் அக்கறையின் இயலுமை தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள அக்கறைகளை நாங்கள் இனங்கண்டுள்ளோம்.

4. தொடர் அக்கறையின் அடிப்படையில் கம்பனியானது நிதிக் கூற்றுக்களைத் தயாரித்துள்ளது. எவ்வாறெனினும் அறிக்கையிடும் தினத்தன்று பின்வரும் நிபந்தனைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன:

- வாழைச்சேனை ஆலையானது குறித்த ஆண்டு காலப்பகுதியில் தனது செயற்பாட்டினை இடைநிறுத்தியுள்ளது.
- 2011 நவம்பர் 15 அன்று எம்பிலிப்பிட்டிய ஆலையானது விற்பனை செய்யப்பட்டுள்ளது.
- 2015 மார்ச் 31 இல் முடிவடையும் ஆண்டுக்குரியதான நட்டப் பெறுமதியாக ரூபா மில்லியன் 123 ஆனது கம்பனியினால் பதிவு செய்யப்பட்டுள்ளது. (2014 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டில் ரூபா மில்லியன் 209)
- 2015 மார்ச் 31 இல் முடிவடையும் ஆண்டுக்குரியதான தேறிய ஆதனத்தின் மறைப் பெறுமதியாக ரூபா மில்லியன் 1090 ஆனது கம்பனியினால் பதிவு செய்யப்பட்டுள்ளது. (2014 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டில் ரூபா மில்லியன் 967)

இக் காரணிகளுடன் மேலே 1 இலிருந்து 3.9 வரைக்கும் குறிப்பிடப்பட்டவையும் மற்றும் அத்துடன் இணைந்ததுமானவையும் சுட்டிக் காட்டுகின்ற பொருட்களின் நிச்சயமற்ற தன்மை தொடர்பில் கம்பனியினது தொடர் அக்கறை தொடர்பான இயலுமையானது குறிப்பிடத்தக்க சந்தேகத்தினை கோடிட்டுக் காட்டுகின்றன. தொடர் அக்கறையின் மீதான பிரயோகத்தில் விபரங்கள் இன்மை மற்றும் பொருத்தமான முகாமைத்துவ மதிப்பீடு இன்மை ஆகியவற்றின் காரணமாக எங்களால் பொருத்தமான தொடர் அக்கறை தொடர்பாக ஊகிக்க முடியாதுள்ளது.

மேலே கலந்துரையாடப்பட்ட காரணிகளின் அடிப்படையில், 2015 மார்ச் 31 இல் உள்ளவாறான கம்பனியினது ஆதனங்கள், பொறுப்புக்கள் தொடர்பில் ஏதாவது சரிப்படுத்தல்கள் தேவையானதென்று எங்களால் தீர்மானம் மேற்கொள்ளவோ மற்றும் 2015 மார்ச் 31 இல் உள்ளவாறான ஒப்புரவு மாற்றக் கூற்று, காசுப் பாய்சற் கூற்றுக்களை உருவாக்குவதில் பயன்படுத்தப்பட்ட மூலங்கள் தொடர்பில் மற்றும் இலாப நட்டங்கள் தொடர்பில் ஏதாவது சரிப்படுத்தல்கள் தேவையானதா என்பது பற்றி தீர்மானிக்கவோ எங்களால் முடியாதுள்ளது.

அபிப்பிராய மறுப்பு

அபிப்பிராய மறுப்புக்கான அடிப்படைகள் என்ற பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள குறிப்பிடத்தக்க காரணிகளின் அடிப்படையில் நாங்கள் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு ஆவணங்களைப் பெறமுடியாத காரணத்தினால் கணக்காய்வு அபிப்பிராயத்துக்குரிய அடிப்படைகளை வழங்க முடியாததுடன் அதனடிப்படையில் நாங்கள் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கருத்தினை வெளிப்படுத்தவில்லை.

ஏனைய காரணிகள்

2014 மார்ச் 31 உடன் முடிவடையும் வருடத்துக்கான கம்பனியின் நிதிக் கூற்றுக்களானது வேறொரு கணக்காய்வாளரின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் பின்வரும் காரணங்களின் அடிப்படையிலே நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் அவரினால் எதிரிடையான அபிப்பிராயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

01. நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பான சட்டக அமைப்பு மீதான கணக்கியல் நியமங்களின் கீழ் தேவைப்படுகின்றவாறு எங்களது பரீட்சித்தலுக்காக அனுப்பிவைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களானவை பொருத்தமான நிதிக் கூற்றுச் சமர்ப்பிப்புடன் இணங்காமையினால் எங்களுக்கு முன்னளிக்கை செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் எங்களால் திருப்திப்பட முடியவில்லை. LKAS 01 - (நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பிப்பு). 525 ஏக்கர் விஸ்தீரணமுள்ள ரூபா 11,188,275 பெறுமதியுள்ள 5 தோட்டங்கள் எம்பிலிப்பிட்டிய ஆலையின் பயிர்ச்செய்கை இருப்பாகக் காட்டப்பட்டு பல வருடங்களாக மாற்றமடையாமல் உள்ளமை சரிபார்க்க முடியாதுள்ளது.
02. வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் மூலம் செயற்படுத்தப்பட்ட இரண்டு கடதாசி ஆலைகளுள் எம்பிலிப்பிட்டிய ஆலை 2011 நவம்பர் 15ஆம் திகதி வெளிநாட்டு வளங்கள் மற்றும் வர்த்தக அபிவிருத்தி அமைச்சுக்குச் சொந்தமான Aus லங்கா கடதாசிக் கம்பனிக் கூட்டுத்தாபனத்திற்கு விலை மனுக்கோரலின் மூலம் விற்பனை செய்யப்பட்டது. விற்பனை செய்வதற்கான விதிகள் மற்றும் நிபந்தனைகள் என்பன விரிவாகக் காட்டப்படாத அதேவேளை, ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கியல் அறிக்கைகள் எம்பிலிப்பிட்டிய ஆலை விற்பனை செய்யப்பட்ட விடயத்தில் முறையாகப் பின்பற்றப்படவில்லை. FCID (புலனாய்வு இல. FCID/145/15) மற்றும் ஜனாதிபதி புலனாய்வு ஆணைக்குழு (புலனாய்வு இல. PCI 859/2015) என்பவற்றில் மேற்படி விற்பனை தொடர்பாகத் தற்போது புலனாய்வு நடைபெற்ற வண்ணம் உள்ளது. இந்த நிலைமையானது குறித்த விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிப்பதிலிருந்து எங்களைத் தடுக்கின்றது.
03. சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பன தொடர்பான பதிவுகள் முறையாகப் பேணப்படாததுடன் சில நிலையான சொத்துக்களை எங்களால் கண்டுபிடிக்கப்படமுடியாதுள்ளது. ஒதுக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கு கம்பனி சரியான முறைமைகளைப் பின்பற்றவில்லை. மேலும் சில நிலையான சொத்துக்கள் முற்றாகத் தேய்வடைந்துள்ளதையும் மற்றும் அவ்வாறான தற்போதும் பயன்பாட்டிலுள்ள நிலையான சொத்துக்களின் பெறுமதியைக் கம்பனியானது மீள்மதிப்பீடு செய்யவில்லை என்பதையும் எங்களால் அடையாளம் காணமுடிந்துள்ளது. LKAS 16 (சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்). கணக்கியல் கொள்கைக்கு இணங்க ஒவ்வொரு நிதியாண்டினதும் முடிவில் சொத்துக்கள், பொறிகள், இயந்திரங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் என்பவற்றின் எஞ்சிய மதிப்பு, பயன்படு காலம் மற்றும் தேய்மானமடைந்த முறை என்பன மீளாய்வு செய்யப்பட வேண்டியதுடன் பொருத்தமான முறையில் சீர்செய்யப்பட வேண்டும்.

04. பின்வரும் நான்கு வழக்குகளும் சட்ட அதிகார சபைகளுக்கு முன்பதாக வாழைச்சேனை ஆலையின் கழிவுப் பொருட்களை அகற்றியமை தொடர்பில் விசாரணை முடிவடையாத நிலையில் காணப்படுகின்றன.

சட்ட அதிகாரசபை	வழக்கு இல. / புலனாய்வுக் கோவை இல.
1. இலஞ்ச ஊழல் ஆணைக்குழு	B/C 3067/2012/B/15
2. மோசடி தொடர்பான பணியகம்	IR 606/03/15
3. குற்றப் புலனாய்வுத் திணைக்களம்	B 201- 2016
4. நீதவான் நீதிமன்றம் - வாழைச்சேனை	B 661/12

மேலே குறிப்பிடப்பட்டுள்ள நான்கு வழக்குகளுக்கும் மேலதிகமாக ஒதுக்கப்பட்ட பொருட்களின் விடயம் தொடர்பில் கவனிக்கும்போது, வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம் கழிவுப் பொருட்களை அகற்றுவதில் தொடர்பில் முறையான ஒழுங்குவிதிகளைப் பின்பற்றவில்லை. இதனடிப்படையில் தீர்வையான காசோலை கிடைக்கப்பெறுவதற்கு முன்னராகவே கழிவுப்பொருட்கள் விடுவிக்கப்பட்டுள்தாகக் குறிப்பிடலாம்.

05. தொழில் பிணக்குகள் தொடர்பான நீதிமன்ற வழக்கு விசாரணைகள் பல இக்கம்பனியின் பால் இருப்பதை நாம் அவதானித்தோம். ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றக்கான நியதிச்சட்ட அடிப்படையிலான தேவைப்பாடுகள் 2014. 03. 31 வரையான தினத்திற்கு செலுத்தப்படவில்லை.

எனினும் தற்காலிக ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியதன் பின்னர் இத்தகைய கொடுப்பனவுகள் மாதிரிகள் பரீட்சித்ததற்கு அமைவாகச் செலுத்தப்பட்டிருக்கின்றன.

நியதிச்சட்டத் தேவைப்பாடுகள் மற்றும் வழக்கு விசாரணைகள் போன்ற எதிர்பாராத பொறுப்புகளுக்கு ஏற்பாடுகளும் வெளிப்படுத்தல்களும் தேவைப்படுகின்றன. எனினும் கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் LKAS 37 உடன் உடன்படவில்லை.

06. கம்பனி மீதான ஒப்பந்தத்தில் பணிப்பாளர்களின் அக்கறை

2015 மார்ச் 31 உடன் முடிவடையும் நிதி வருடத்தில் கம்பனி மீதான ஒப்பந்தத்தில் பணிப்பாளர்களின் அக்கறை தொடர்பில் எங்களுக்கு எந்தத் தகவல்களும் வழங்கப்படவில்லை. மேலும் 2012 ஏப்ரல் 02 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் கம்பனியினை முகாமை செய்வதற்கு கம்பனியின் தகுதிவாய்ந்த அதிகார சபையினால் பணிப்பாளர் சபையானது மாற்றப்பட்டதையும் நாங்கள் அவதானித்தோம்.

அபிப்பிராய மறுப்புக்கான காரணிகளின் அடிப்படை விபரிக்கப்பட்ட பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு, கணக்காய்வின் அடிப்படையான அபிப்பிராயங்களை வழங்குவதற்கான போதுமான கணக்காய்வு ஆவணங்களை எங்களால் பெறமுடியாதிருந்தது. அதன் பிரகாரம் 2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 163 (2) இன் தேவைப்பாடுகளுக்கு அமைவாக எந்களால் அபிப்பிராயங்களை வெளிப்படுத்த முடியாமல் இருக்கின்றது.

16 ஜனவரி 2019

கொழும்பு

வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம்
31 மார்ச் 2015 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	2015 ரூபா	2014 ரூபா
சொத்துக்கள்			
நடைமுறை அல்லாத சொத்துக்கள்			
சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்	4	88,827,869	90,823,839
நீண்டகால முதலீடுகள்	5	(1,964,561)	56,484,145
		86,863,308	**147,307,984**
நடைமுறைச்சொத்து			
பொருள் பட்டியல்	6	136,275,892	133,794,636
விற்பனை மற்றும் ஏனைய வருமதிகள்	7	311,535,710	286,399,252
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	13.1	18,673,610	2,203,853
		466,485,212	**422,397,741**
மொத்தச் சொத்துக்கள்		553,348,520	569,705,725
ஒப்புரவு & பொறுப்புக்கள்			
ஒப்புரவு			
தீர்மானிக்கப்பட்ட மூலதனம்	8	323,000,000	323,000,000
வெளிநாட்டு மானியங்கள்		41,777,052	41,777,052
மூலதன ஒதுக்கம்		45,087,534	45,087,534
தக்கவைக்கப்பட்ட நட்டங்கள்		(1,500,796,172)	(1,377,260,670)
மொத்த ஒப்புரவு		**(1,090,931,586)**	**(967,396,084)**
நடைமுறை அல்லாப் பொறுப்புக்கள்			
வட்டி – கடன் சுமைகள், இரவல் வாங்கியவை	12	162,715,313	164,603,934
		162,715,313	**164,603,934**
நடைமுறைப் பொறுப்புக்கள்			
விற்பனை மற்றும் சென்மதிகள்	9	1,362,765,222	1,220,219,461
வட்டிக்கான நடைமுறைப் பகுதி – கடன் சுமைகள் மற்றும் இரவல் வாங்கியவை	12	1,973,287	1,395,005
அரசுக்கான சென்மதிகள்	9	100,681,254	88,486,726
வங்கி மேலதிகப்பற்று	13.2	16,145,030	62,396,683
மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்		1,481,564,793	1,372,497,875
மொத்த ஒப்புரவும் பொறுப்புக்களும்		**553,348,520**	**569,705,725**

இந்த நிதிக் கூற்றுக்கள் 2007 ஆம் ஆண்டு 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்குகின்றது என்பதை நான் சான்றுறுதிப்படுத்துகின்றேன்.

.....

பிரதான கணக்காளர்

இந்த நிதிக்கூற்றுக்களுக்கான பொறுப்பானது தகுதிவாய்ந்த அதிகாரசபைக்குரியதாகும்.

கையெழுத்திடப்பட்டது:

.....

தகுதிவாய்ந்த அதிகாரி

படிவம் 16 இனூடான 09 பக்க கணக்கியல் கொள்கைகளானது நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த ஒரு பகுதியாகும்.

வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம்
2015 மார்ச் 31 உடன் முடிவடையும் வருடத்துக்கான
இலாப நட்டக் கூற்றுக்கள்

	குறிப்பு	**2015** **ரூபா**	**2014** **ரூபா**
வருமானம்	3	74,905,615	77,131,693
விற்பனைப் பெறுமதி		(243,118,251)	(258,628,276)
மொத்த நட்டம்		(168,212,636)	(181,496,583)
ஏனைய வருமானங்கள்	3.1	94,769,476	13,461,978
நிர்வாகச் செலவீனங்கள்		(34,653,539)	(30,624,230)
விற்பனை விநியோகச் செலவீனங்கள்		(7,779,378)	(7,256,138)
ஏனைய செயற்பாட்டுச் செலவீனங்கள்		(3,222,458)	(2,574,498)
ஆண்டுக்கான செயற்பாட்டு நட்டம்		(119,098,535)	(208,489,471)
நிதி வருமானம்	10	4,499,115	7,203,080
நிதிச் செலவீனங்கள்	11	(8,705,267)	(7,377,810)
ஏனைய செலவீனங்கள்		(334,072)	(562,500)
வரி விதிப்புக்கு முன்னரான நட்டம்		(123,638,759)	(209,226,700)
வருமான வரிச் செலவீனங்கள்		-	-
வருடத்துக்கான நட்டம்		(123,638,759)	(209,226,700)

படிவம் 16 இனூடான 09 பக்க கணக்கியல் கொள்கைகளானது நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த ஒரு பகுதியாகும்.

வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம்

2015 மார்ச் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான

ஒப்புரவு மாற்றக் கூற்றுக்கள்

விபரணம்	தீர்மானிக்கப்பட்ட மூலதனம் ரூபா (குறிப்பு 08)	வெளிநாட்டு மானியங்கள் ரூபா	மூலதன ஒதுக்கீடு ரூபா	தக்கவைக்கப்பட்ட நட்டம் ரூபா	மொத்தம் ரூபா
2013. 04. 01 இல் மீதி	323,000	41,777,052	45,087,534	(934,999,457)	(525,125,872)
நட்டத்தின் மீதான சரிப்படுத்தல்கள்	-	-	-	(233,043,512)	(233,043,512)
வருடத்துக்கான நட்டம்	-	-		(209,226,700)	(209,226,700)
31. 03. 2014 இல் மீதி	323,000,000	41,777,052	45,087,534	(1,377,260,670)	(209,226,,700)
நட்டத்தின் மீதான சரிப்படுத்தல்கள்	-	-	-	(103,258)	(103,258)
வருடத்துக்கான தேறிய நட்டம்	-	-	-	(123,638,759)	(123,638,759)
31. 01. 2013 இற்கு மீதி	323,000,000	41,777,052	45,087,534	(1,500,796,172)	(1,090,931,586)

படிவம் 16 இனூடான 09 பக்க கணக்கியல் கொள்கைகளானது நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த ஒரு பகுதியாகும்.

வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம்
31 மார்ச் 2015 உடன் முடிவடையும் வருடத்துக்கான
காசுப் பாய்ச்சல் கூற்று

	2015 ரூபா	2014 ரூபா
தொழிற்படு நிகழ்வுகளுக்கான காசுப் பாய்ச்சல்		
வரிக்கு முந்தியது	(123,638,759)	(209,226.70)
ஆரம்ப மீதி வேறுபாட்டுக்கான முன்னய வருட சரிப்படுத்தல்கள்	103,258	9,254.90
சரிப்படுத்தல்கள்		
தேய்மானம்	5,322,543	6,006.75
திரண்ட தேய்மானத்துக்கான சரிப்படுத்தல்கள் - எம்பிலிப்பிட்டிய	-	(6,948.93)
நிலையான சொத்துகளை அகற்றுவதன் மீதான நட்டம்	8,572	-
வட்டி வருமானம்	(4,499,115)	(7,203.08)
நிதிச் செலவுகள்	8,705,267	7,182,510
வட்டி செலவுகள்	6,855	1,403
மூலதன வேறுபாடுகள் செயற்படுவதற்கு முன்னரான தொழிற்படு நட்டம்	(113,998,235)	(200,934,54)
பொருள் விபரப் பட்டியல் (அதிகரிப்பு / குறைவு)	(2,481,254)	27,575,86
வருமதிகள் (அதிகரிப்பு / குறைவு)	(24,912,654)	(4,531,890)
சென்மதிகள் (அதிகரிப்பு / குறைவு)	142,545,760	168,669,840
அரசுக்குரிய சென்மதி (அதிகரிப்பு / குறைவு)	12,194,528	-
செயற்பாடுகளிலிருந்தான பண உற்பத்தி	13,348,146	(9,220,730)
செலுத்திய நிதிச் செலவு	(8,705,267)	(7,182,510)
தொழிற்படு செயற்பாடுகள் மீதான நிகர காசுப் பாய்ச்சல்	4,642,879	(16,403,240)
முதலீட்டு நடவடிக்கைகளுக்கான காசுப் பாய்ச்சல்		
சொத்துக்கள், பொறிகள் & உபகரணங்கள் மீதான கையகப்படுத்தல்	(3,381,140)	(1,809,685)
நிலையான சொத்துக்களை அகற்றியதன் மூலம் கிடைக்கப்பெற்றவை	45,995	-
நிலையான வைப்பு முதிர்ச்சி	58,448,707	(3,278,622)
கிடைக்கப் பெற்ற வட்டி	4,499,115	7,203,080
முதலீட்டு நடவடிக்கைகளுக்கான நிகர காசுப் பாய்ச்சல்	59,612,677	2,114,773
நிதி நடவடிக்கைகளுக்கான காசுப் பாய்ச்சல்		
அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெற்றவை	-	9,063,851
பெறப்பட்ட கடன்கள்	9,760,945	-
நீண்ட காலக் கடன் மீளச் செலுத்தவேண்டியவை	(10,174,650)	-
செலுத்தப்பட்ட வாடகைக் கட்டணம்	(1,120,440)	(395,811)
நிதி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்ட நிகர காசுப் பாய்ச்சல்	(1,534,145)	8,668,040
பணம் அல்லது பணத்திற்கு ஈடானவை மீதான நிகர அதிகரிப்பு	62,721,410	(5,620,427)
குறிப்பு A இன் ஆரம்பத்தில் பணம் அல்லது பணத்திற்கு நிகரானவை	(60,192,830)	(54,572,403)
(குறிப்பு B) கால முடிவின் இறுதியில் பணம் மற்றும் பணத்திற்கு நிகரானவை	2,528,580	(60,192,830)

குறிப்பு A		
சாதகமான காசு மீதி	2,203,853	20,022
பாதகமான காசு மீதி	(62,396,683)	1,475,670
	(60,192,830)	1,495,692
குறிப்பு B		
சாதகமான காசு மீதி	18,673,610	2,203,853
பாதகமான காசு மீதி	(16,145,030)	(62,396,683)
	2,528,580	(60,192,830)

படிவம் 16 இனூடான 09 பக்க கணக்கியல் கொள்கைகளானது நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த ஒரு பகுதியாகும்.

வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம்
31 மார்ச். 2013 இல் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களுக்குரிய கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள்

1. கூட்டுத்தாபனத் தகவல்கள்

1.1 பொது

இக் கம்பனியானது முற்றாக அரசாங்கத்துக்குச் சொந்தமான கூட்டிணைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட பொறுப்புடமைக் கம்பனியாவதுடன் 01 யூலை 1992 இலிருந்து இலங்கையில் வதிவிடத்தைக் கொண்டமைந்துள்ளது. பதிவு செய்யப்பட்ட கம்பனியின் காரியாலயம் ஆனது இல. 93, யாவத்த, கொழும்பு 05 இல் அமைந்துள்ளது.

அதனது வியாபார முதன்மை இடமானது வாழைச்சேனை ஆலையில் அமைந்துள்ளதுடன் தலைமைக் காரியாலயம் கொழும்பில் அமைந்துள்ளது.

1.2 முதன்மைச் செயற்பாடுகளும் செயற்பாட்டின் தன்மையும்

கடதாசி மற்றும் கடதாசி போட்டுக்களைச் செய்வதே கம்பனியின் முதன்மைச் செயற்பாடாகும். குறித்த ஆண்டில் கம்பனியானது தனது பிரதான செயற்பாட்டினைச் செயற்படுத்தவில்லை.

1.3 விநியோகிப்பதற்கான அங்கீகாரம்

வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் 31, மார்ச், 2015 இல் முடிவடையும் ஆண்டுக்குரிய நிதிக் கூற்றுக்களை விநியோகிப்பதற்கான அங்கீகாரமானது 05, நவம்பர், 2018 இல் தகுதிவாய்ந்த அதிகார சபையினால் அளிக்கப்பட்டுள்ளது.

2.1 தொடரும் அக்கறை

கம்பனியானது 31 மார்ச். 2015 இல் முடிவடைந்த வருடத்துக்கான ஏற்க நேர்ந்த செலவாக நிகர நட்டம் ரூபா 123,638,759 உம் (31 மார்ச் 2014 இல் முடிவடைந்த வருடத்துக்கானது ரூபா 209,226,700) கம்பனியினது நடைமுறைப் பொறுப்பானது அதனது நடைமுறைச் சொத்துக்களிலும் பார்க்க ரூபா 1,015,079,581 ஆல் விஞ்சியதுடன் (31 மார்ச் 2014 இல் முடிவடையும் வருடத்துக்கானது ரூபா 950,100,134) மற்றும் மொத்தப் பொறுப்புக்களானது மொத்தச் சொத்துக்களிலும் பார்க்க ரூபா 1,090,931,586 ஆல் விஞ்சியதாகவும் (31 மார்ச் 2014 இல் முடிவடையும் வருடத்துக்கானது ரூபா 967,396,084) காணப்பட்டது. மேலும் கம்பனியானது அதனது பிரதான வியாபாரத்தினைக் குறிப்பிட்ட வருடத்தில் செயற்படுத்தாததுடன் அதன் விளைவாக ரூபா 168,212,636 தேறிய நட்டம் ஏற்பட்டதுடன் (31 மார்ச் 2014 இல் முடிவடைந்த வருடத்துக்கானது ரூபா 181946,583) அமைச்சிலிருந்து கிடைக்கப்பெறும் நிதியில் பெரிதும் தங்கியிருந்தது. மேற்படி காரணிகளானவை கம்பனியினது தொடர் அக்கறையை முன்னெடுத்துச் செல்லக்கூடியதாக இருந்ததா என்பது பற்றிய கணிசமான சந்தேகத்தினை ஏற்படுத்தியுள்ளது.

2.2 பொருளுண்மையுள்ள கணக்கியல் கொள்கைகளின் சுருக்கம்

2.2 நடைமுறை வரிகள்

வரிவிதிப்பு அதிகார சபையினால் அறவிடப்பட அல்லது செலுத்தப்பட எதிர்பார்க்கப்பட்ட தொகையிலிருந்தே சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கான நடைமுறை வரிகள் அளவிடப்பட்டுள்ளது. அறிக்கையிடப்பட்ட காலப் பகுதியின் இறுதியில் இயற்றப்பட்ட அல்லது பொருண்மையாக இயற்றப்பட்ட வரி வீதம் மற்றும் வரிச் சட்டங்களின் பயன்படுத்தப்பட்டதன் அடிப்படையிலேயே கணக்குகளானது கணக்கிடப்பட்டுள்ளது.

2.2 தாமத வரிகள்

தாமத வரிவிதிப்புகளானது வரி இழப்புகள் காரணமாக வழங்கப்பட்டிருக்கவில்லை.

2.2 பணம் மற்றும் பணத்துக்கு நிகரானவை

நிதி நிலைமைக் கூற்றுக்களிலுள்ள பணம் மற்றும் பணத்துக்கு நிகரானவை காசுப் பாய்ச்சல் கூற்றின் நோக்கத்துக்காக கையிலுள்ள பணம் மற்றும் பணத்துக்கு நிகரானவை என்பவற்றை உள்ளடக்குகின்றது.

2.2 சொத்து, பொறிகள் மற்றும் உபகரணம்

சொத்து, பொறி மற்றும் உபகரணம் என்பவை அவற்றின் பெறுமதியின் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் நாளுக்கு நாள் ஏற்படுகின்ற விநியோகச் செலவுகள் கழிக்கப்பட்டும், திரண்ட தேய்மானம் மற்றும் திரண்ட சேதங்கள் அவற்றின் பெறுமதியிலிருந்து கழிக்கப்பட்டும் குறிப்பிடப்பட்டுள்ளன. அத்தகைய பெறுமதியானது அங்கீகரிக்கப்பட்ட அளவுகோல்கள் பூர்த்தி செய்யப்பட்டால் பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீள் பொருத்துகைக்கு ஏற்பட்ட செலவீனங்களையும் உள்ளடக்கியிருக்கும்.

குறிப்பு 4.4 இல் வெளிக்காட்டப்பட்டுள்ள இந்த நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களின் பயன்படு காலத்துக்குரிய தேய்மானமானது நேர் கோட்டு முறையின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டுள்ளது.

அகற்றலின் மீது பொறிகள் அல்லது உபகரணத்தின் எந்தவொரு உருப்படியும் நிராகரிக்கப்பட்டு அல்லது அவற்றின் பயன்பாடு அல்லது அகற்றலின் மூலம் எந்தவொரு எதிர்காலப் பொருளாதார நன்மையும் எதிர்பார்க்கப்படாவிட்டால் அந்தச் சொத்து நிராகரிக்கப்பட்ட காலப் பகுதிக்குரிய இலாப நட்டக் கூற்றில் அந்தச் சொத்தின் மீது எழுகின்ற எந்தவொரு இலாபம் அல்லது நட்டம் உள்ளடக்கப்பட்டுள்ளது. (சொத்துக்களுக்குரிய நிகர அகற்றல் செயன்முறை மற்றும் காவிச் செல்லும் தொகைக்குரிய வேறுபாட்டின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டுள்ளது.)

ஆரம்பத்திலே மதிப்பீடு செய்யப்பட்ட செயற்பாட்டு நியமங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதார நன்மைகளை மீள் நிறுத்துவதற்கு அல்லது பராமரிப்பதற்குரிய சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்குரிய பழுதுபார்த்தல் அல்லது பராமரிப்புக்கு ஏற்பட்ட செலவீனங்களானவை ஏற்பட்ட செலவீனங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு நிதி ஆண்டின் இறுதியிலும் பொருத்தமானதாக இருப்பின் சொத்துக்களின் எஞ்சிய மதிப்பு, பயன்படு வாழ்க்கைக் காலம் மற்றும் தேய்மானம் கணிக்கும் முறைகள் என்பன திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

2.3.1.2. ஓய்வூதிய நன்மைக் கடப்பாடுகள்

a) வரையறுக்கப்பட்ட நன்மைகள் திட்டம் - பணிக் கொடை

தொழில் பெறுநர் அதற்குரிய தகுதியைக் கொண்டிருந்த போதும் தொழில் பெறுநருக்கான ஓய்வூதியப் பணிக் கொடைக்கான ஏற்பாடுகள் எதுவும் செய்யப் பட்டிருக்கவில்லை. எனவே, 31. மார்ச். 2014 ஆம் ஆண்டுக்கான முழுப் பணிக் கொடை ஏற்பாடுகள் சீர் செய்யப்படுவதுடன் 31. மார்ச். 2015 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பணிக் கொடை வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும் குறிப்பிடத்தக்க ஓய்வு பெற்ற தொழில் பெறுநர்களால் அவர்களது ஓய்வூதிய உரிமைக் கோரிக்கையினை சட்ட ரீதியிலான முறைமை மூலம் கோரியிருப்பதுடன் அவற்றுக்கான வழக்கு நடவடிக்கைகள் தொடர்ந்தும் கேட்பிலேயே உள்ளன.

b) வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் - ஊ.சே.நி மற்றும் ஊ.ந.நி

தொழில் பெறுநர்கள், ஊழியர் சேம இலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றுக்கான பங்களிப்புச் செய்வதற்கு அதனுடன் தொடர்புடைய சட்டம் மற்றும் ஒழுங்குகளுக்கு ஏற்ப உரித்துடையவர்கள். கம்பனியானது தொழில் பெறுநரின் மொத்த ஊழியத்தின் 12%, மற்றும் 3% முறையே ஊழியர் சேம இலாப நிதியத்துக்கும் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கும் பங்களிப்புச் செய்கின்றது.

1980 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டம் மற்றும் 1958 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க ஊழியர் சேம இலாப நிதியச் சட்டத்தின் கீழாக ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவாறு ஒப்ந்த அடிப்படையிலான தொழில் பெறுநர்களுக்கான ஊ.சே.நி மற்றும் ஊ.ந.நி என்பவற்றை குறைக்காமை கம்பனியின் கொள்கையாக் காணப்படுகின்றது.

1.1.1 பொருட் பட்டியல்

வழக்கற்றுப்போன மற்றும் மெதுவாக அசையும் உருப்படிகளுக்குரிய நிலுவை மேலதிகப் படிகளைச் செலுத்தியதன் பின்னர் பொருட் பட்டியலானது குறைந்த பெறுமதி மற்றும் தேறிய பெறுமதியின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளது. நிகர தேறிய பெறுமதி என்பது பூரணப்படுத்துவதற்கு மதிப்பிடப்பட்ட பெறுமதி மற்றும் விற்பனை செய்வதற்கு அவசியமானது என மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியை பொருட் பட்டியலின் சாதாரண வியாபாரத்தின் போதான விற்பனையிலிருந்து கழிக்கப்பட்டதான பெறுமதியைக் குறிக்கின்றது.

நிறை அடிப்படையிலான பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு பொருட் பட்டியலை தற்போதைய இடம் மற்றும் நிலைமைக்கு கொண்டுவருவதற்கு ஏற்பட்ட செலவைக் கொண்டு கணிப்பிடப்பட்டுள்ளது.

2.3.1 விற்பனை மற்றும் வருமதிகள்

தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம்
விற்பனை வருமதியானது மதிப்பிடப்பட்ட தேறிய வருமதிகளின் நிகர வலுக் குறைவுத் தொகையின் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், ஏனைய வருமதிகளானது அதற்குரிய சேதப் பெறுமதியைக் கழித்து அங்கீகரிக்கப்படுகின்றது.

2.3 ஏற்பாடுகள், எதிர்பாரா சொத்துக்கள் மற்றும் எதிர்பாரா பொறுப்புக்கள்

கடந்தகால நிகழ்வின் விளைவான நிகழ்காலக் கடப்பாடுகளைக் (சட்டம் அல்லது அமைப்பக) கம்பனி கொண்டிருக்குமிடத்து ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. கடப்பாடுகளைத் தீர்ப்பதற்கு பொருளாதார நன்மைகளை உள்ளடக்கிய வளங்களின் வெளியேற்றம் சாத்தியப்படுவதுடன் மற்றும் கடப்பாடுகளின் தொகைக்குரிய தேறிய மதிப்பீடானது செய்யப்படலாம்.

ஊழியர்களினால் தமக்குரிய கடப்பாடுகள் மற்றும் பதவி உயர்வு தொடர்பான உரிமைபோரி சட்ட ரீதியான வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. அவை இன்னும் கேட்பிலேயே உள்ளன.

2.4 வருமானக் கூற்று

2.4 வருமான அங்கீகாரம்

பொருளாதார நன்மைகள் சாத்தியமானவரை கம்பனிக்கு சேரக்கூடிய வகையில் வருமானமானது அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் மற்றும் ஏற்பட்ட வருமானம் அல்லது தொடர்பான பெறுமதி அல்லது ஏற்படக்கூடிய பெறுமதி உணரக்கூடிய முறையில் அளவிடப்பட்டுள்ளது.

பெறப்பட்ட அல்லது பெறப்படக்கூடிய பிரதிபயனின் சாதாரண பெறுமதியின் அடிப்படையில் வருமானமானது அளவிடப்பட்டுள்ளது.

வருமானத்தை அங்கீகரிக்கும் நோக்கத்துக்காக பின்வரும் விசேடமான அளவுகோல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

a) **பொருட்களின் விற்பனை**
   வழமையான பொருட்கள் அனுப்புதல் மீதான பொருட்களது உரிமையின் குறிப்பிடத்தக்களவு இடர் மற்றும் உரிமை என்பன வாங்குவோனுக்கு மாற்றப்பட்டதன் பின்னரே பொருட்களது விற்பனையிலிருந்தான வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

b) **வட்டி**
   நேர விகிதாசார அடிப்படையில் கணக்கெடுக்கப்படுகின்ற சொத்துக்களின் மீதான செயற்திறனுள்ள வட்டி வீதமே வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது.

c) **பங்கு இலாபம்**
   பங்குதாரர்களுக்கு கொடுப்பனவுகளைப் பெறுவதற்கான உரிமை காணப்படுமிடத்து பங்கு இலாப உரிமையானது அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

d) **ஏனையவை**
   வந்துறுகையின் அடிப்படையில் ஏனைய வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

2.4 செலவீனங்களுக்குரிய அங்கீகாரம்

தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம்

இலாப நட்டக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான ஏற்பட்ட செலவீனங்கள் மற்றும் சம்பாதித்த விஷேட உருப்படிகளின் வருமானத்துக்குமுரிய வேறுபாட்டினை அடிப்படையாகக் கொண்டு நேர்கோட்டு அமைப்பு முறையில் செலவீனங்கள் அங்கீகரிக்கப்படுகின்றது. வியாபார நடவடிக்கையின் போது ஏற்பட்ட எல்லாச் செலவீனங்களும் இலாப நட்டக் கூற்றுக்கு மாற்றப்பட்டுள்ளது.

இலாப நட்டக் கூற்றினை சமர்ப்பிக்கும் நோக்கத்துக்காக கம்பனியானது' செலவீனங்களின் தொழிற்பாடு' என்பதற்கு இசைவாக்கம் அடைந்துள்ளது என்பதுடன் அதன் அடிப்படையில் கம்பனியானது தனது செயற்பாட்டிற்குரிய நேர்த்தியான மூலங்களை வெளியிட்டுள்ளது.

3. **வருமானம்**	**2015 ரூபா**	**2014 ரூபா**
மொத்த வருமானம்	74,905,615	77,131,693
	74,905,615	**77,131,693**

3.1. **ஏனைய வருமானம்**	**2015 ரூபா**	**2014 ரூபா**
பாசிக்குடா செயற்திட்ட வருமானம்	10,171,850	9,965,995
ஏனைய வருமானம் - தலைமை அலுவலகம்	83,623,697	1,216,995
கழிவுக் கடதாசி விற்பனை	973,929	2,027,708
ஏனைய வருமானம் - வாழைச்சேனை	-	251,2812
	94,769,476	**13,461,978**

4. சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணம்

4.1.

மொத்த காவுகைத் தொகை	**01.04.2014 இல் உள்ளவாறு ரூபா**	**மேலதிகம் ரூபா**	**மீள் மதிப்பீடு ரூபா**	**அகற்றிவை ரூபா**	**31.02.2015 இற்கு ரூபா**
பெறுமதியின் அடிப்படையில்			-		
நிலம் மற்றும் கட்டடம்	132,274,693		-		132,274,693
தளபாடம் மற்றும் பொருத்துகை	15,715,800	125,000	-	(93,000)	15,715,800
மோட்டார் வாகனங்கள்	26,370,600	-	-	-	26,370,600
இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்	470,973,374	-	-	-	470,973,374
செயன்முறை உபகரணங்கள்	87,358,241	-	-	-	87,358,241
கணினிகள்	723,140	250,490	-	(31,990)	941,640
நுகரப்பட்டவை	105,415,606	-	-		105,415,606
	838,833,455	**375,490**	**-**	**(124,990)**	**839,083,955**
மூலதன வேலை முன்னேற்றம்	34,224,272	3,005,650	-	-	37,229,922
	34,224,272	**3,005,650**	**-**	**-**	**37,229,922**
மொத்த காவுகைத் தொகை	**873,057,727**	**3,381,140**	**-**	**(124,990)**	**876,313,876**

4.2. தேய்மானம்

தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம்

தேய்மானப் பெறுமதி	01.04.2014 இல் உள்ளவாறு ரூபா	ஆண்டுக்கான கட்டணங்கள் ரூபா	அகற்றல்கள் ரூபா	31.03.2015 இல் உள்ளவாறு ரூபா
நிலம் & கட்டடம்	114,467,971	451,015	-	114,918,987
தளபாடங்கள் & பொருத்துதல்கள்	15,630,925	15,250	(65,100)	15,581,075
மோட்டார் வாகனங்கள்	21,924,439	1,659,598	-	23,584,038
இயந்திரங்கள் & உபகரணங்கள்	438,905,786	2,754,283	-	441,660,069
செயன்முறை உபகரணங்கள்	86,686,791	2,779	-	86,689,570
கணினிகள்	168,562	201,818	(5,323)	365,057
நுகரப்பட்டவை	104,449,413	237,799	-	104,687,212
மொத்தத் தேய்மானம்	**782,233,888**	**5,322,543**	**(70,423)**	**787,486,008**

4.3 தேறிய முகப் பெறுமதி

பெறுமதி அடிப்படையில்	2015 ரூபா	2014 ரூபா
கட்டட நிலம் & கட்டடங்கள்	17,355,707	17,806,722
தளபாடம் & பொருத்துதல்கள்	166,725	84,875
மோட்டார் வாகனம்	2,786,562	4,436,160
இயந்திரங்கள் & உபகரணங்கள்	29,313,305	32,067,588
செயன்முறை உபகரணங்கள்	668,672	671,451
கணினிகள்	576,583	554,578
நுகரப்பட்டவை	730,394	968,193
	51,597,947	56,599,567
நடைமுறையிலுள்ள மூலதன வேலை	37,229,922	34,224,272
சொத்து, பொறி & உபகரணங்களைக் காவிச் செல்வதற்கான தொகை	**88,827,869**	**90,823,839**

4.4 சொத்துக்களின் பயன்படு வாழ்க்கைக் காலம் பின்வருமாறு மதிப்பிடப்பட்டுள்ளது.

	2015	2014
நிலம் & கட்டடமும்	40 வருடங்கள்	40 வருடங்கள்
தளபாடங்கள் & பொருத்துகைகள்	10 வருடங்கள்	10 வருடங்கள்
மோட்டார் வாகனங்கள்	4 வருடங்கள்	4 வருடங்கள்
இயந்திரங்கள் & உபகரணங்கள்	15 வருடங்கள்	15 வருடங்கள்
செயன்முறை உபகரணங்கள்	15 வருடங்கள்	15 வருடங்கள்
கணினிகள்	5 வருடங்கள்	5 வருடங்கள்
நுகரப்பட்டவை	15 வருடங்கள்	15 வருடங்கள்

4.5. குறித்த நிதி வருடத்திற்குள் கம்பனியின் திரண்ட சொத்துக்கள், தளபாடங்கள், உபகரணங்கள் என்பவற்றுக்கான மொத்த பெறுமதி ரூபா 3,381,140.00 (2014 - ரூபா 226,300) ஆகும். சொத்துக்கள், தளபாடங்கள், உபகரணங்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்கு குறித்த வருடதடதில் ரூபா 3,381,140.00 (2014 – ரூபா 226,300) காசு மூலமான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

5. **நீண்ட கால முதலீடுகள்**

தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம்	2015 ரூபா	2014 ரூபா
நீண்ட கால முதலீடுகள்	(1,964,561)	56,484,145
	(1,964,561)	**56,484,145**

6. பொருட் பதிவேடு

	2015 ரூபா	2014 ரூபா
மூலப் பொருட்கள்	14,618,178	13,646,258
முடிவடைந்த பொருட்கள்	12,501,450	1,317,417
உதிரிப் பாகங்கள் & உபகரணங்கள்	79,523,390	79,328,315
நுகரப்பட்ட பொருட்கள்	29,632,874	39,502,646
	136,275,892	**133,794,636**

7. **விற்பனை மற்றும் ஏனைய வருமதிகள்**

	2015 ரூபா	2014 ரூபா
விற்பனை வருமதிகள்	58,620,894	37,932,567
வருமதிக்கான ஏற்பாடுகள் - ஏனையவை	(2,829,234)	(2,829,234)
	55,791,659	35,103,333
ஏனைய வருமதிகள்	236,294.238	243,683.627
வைப்புக்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள்	19,449,813	7,612,292
	311,535,710	**286,399,252**

8. **தீர்மானிக்கப்பட்ட மூலதனம்**

	2015 ரூபா	2014 ரூபா
திறைசேரி நிதியுதவியுடனான தீர்மானிக்கப்பட்ட மூலதனம்	323,000,000	323,000,000
	323,000,000	**323,000,000**

9. வியாபாரம் மற்றும் ஏனைய சென்மதி நிலுவை

	2015 ரூபா	2014 ரூபா
சென்மதி விற்பனைகள் – ஏனையவை	150,244,725	106,125,564
ஏனைய சென்மதிகள்	1,165,553,796	1,077,234,739
வட்டாரங்களுக்கான சென்மதி	1,073,515	-
	1,316,872,037	**1,183,360,303**
நிலையியல் சட்ட சென்மதி	45,893,185	36,859,158
	1,362,765,222	**1,220,219,461**
அரசுக்குரிய சென்மதி	100,681,254	88,486,726
	1,463,446,476	**1,308,706,187**

10. நிதி வருமானம்

	2015 ரூபா	2014 ரூபா
நிலையான வைப்புக்கள் மீதான வட்டி வருமானம்	4,499,115	7,203,080
	4,499,115	**7,203,080**

11. நிதிச் செலவுகள்

	2015 ரூபா	2014 ரூபா
வட்டிச் செலவுகள்	8,705,267	7,377,810
	8,705,267	**7,377,810**

12. வட்டி – கடன் மற்றும் இரவல்களை ஈடுசெய்வதற்கானது

	2015 ஒரு வருடத்தக்குள் மீள செலுத்த வேண்டிய தொகை ரூபா	**2015 ஒரு வருடத்தின் பின் மீள செலுத்த வேண்டிய தொகை ரூபா**	**2015 மொத்தம் ரூபா**	**2014 ஒரு வருடத்துக்குள் மீள செலுத்த வேண்டிய தொகை ரூபா**	**2014 ஒரு வருடத்தின் பின் மீள செலுத்த வேண்டிய தொகை ரூபா**	**2014 மொத்தம் ரூபா**
கடன்கள்	-	159,590,943	159,590,943	-	160,004,648	160,004,648
நிதிக் குத்தகை	1,973,287	3,124,370	5,097,657	1,395,005	4,599,286	5,994,291
வங்கி மேலதிகப் பற்று (குறிப்பு 14.2)	16,145,030	-	16,145,030	62,396,682	-	62,396,682
	18,118,317	**162,715,313**	**180,833,629**	**63,791,688**	**164,603,934**	**228,395,621**

12.1 கடன்கள்

	01.04.2014 இற்கு ரூபா	கிடைக்கப் பெற்ற கடன்கள் ரூபா	மீள்கொடுப்பனவுகள் ரூபா	31.03.2015 இற்கு ரூபா
KFW கடன்	159,654,648	-	-	159,654,648
பரந்தன் இரசாயனம் - கடன்	350,000	-	-	350,000
மக்கள் வங்கி – U 13785	-	8,784,850	(9,175,304)	(390,454)
மக்கள் வங்கி – U 13794	-	976,095	(999,346)	(23,251)
	160,004,648	**9,760,945**	**(10,174,650)**	**159,590,943**

12.2 நிதிக் குத்தகை

	01.04.2014 இல் உள்ளவாறு ரூபா	பெற்றுக் கொள்ளப்பட்ட குத்தகை ரூபா	மீள் கொடுப்பனவு ரூபா	31.03.2015 இல் உள்ளவாறு ரூபா
குத்தகை – 8822 HCLELE 1200063800	1,875,646	-	(262,395)	1,613,251
குத்தகை – 8825 HCLELE 1200063700	1,957,753	-	(341,740)	1,616,013
குத்தகை – 8709 HCLELE 1200063600	2,384,698	-	(516,305)	1,868,393
	6,218,097	**-**	**(1,120,440)**	**5,097,657**

	2015 ரூபா	2014 ரூபா
மொத்தப் பொறுப்புக்கள்	6,345,539	8,183,864
எதிர்காலத்துக்கென ஒதுக்கப்பட்ட நதிக் கட்டணங்கள்	(1,247,882)	(1,965,767)
தேறிய பொறுப்புக்கள்	5,097,657	6,218,097

13. பணம் மற்றும் பணத்துக்கு நிகரானவை

13	**பணம் மற்றும் பணத்துக்கு நிகரானவை** பணம் மற்றும் பணத்துக்கு நிகரானவற்றின் மூலகங்கள் சாதகமான பணம் மற்றும் பணத்துக்கு நிகரானவற்றின் மீதி	**2015 ரூபா**	**2014 ரூபா**
13.1.	கையில் மற்றும் வங்கியிலுள்ள பணம்	18,673,610	2,203,853
	சாதகமற்ற பணம் மற்றும் பணத்திற்கு நிகரானவைகளின் மீதி		
13.2	வங்கி மேலதிகப் பற்று	(16,145,030)	(62,396,683)
	பணம் மற்றும் பணத்திற்கு நிகரான மீதி	**2,528,580**	**(60,192,830)**

14. எதிர்பாரா நிகழ்வு

14.1 எதிர்பாரா நிகழ்வு

15. ஊழியர்களால் கம்பனி தனது கடப்பாடுகளைத் திருப்திப்படுத்தும்படி கோவையிடப்பட்ட பல நீதிமன்ற வழக்குகள் காணப்படுகின்றன. இதனது வெளியீடுகள் 31 மார்ச் 2015 ஆம் ஆண்டு முடிவில் தீர்க்கப்படாமல் உள்ளது. நிதிக் கூற்றுக்களில் அவற்றைத் தீர்ப்பதற்கான எந்த ஏற்பாடுகளும் காணப்படவில்லை.

16. அறிக்கை சமர்ப்பிக்கும் திகதிக்குப் பின்னர் ஏற்படும் நிகழ்வுகள்

நிதிக் கூற்றுக்களில் சரிப்படுத்தல்கள் தேவைப்படுகின்ற அல்லது வெளிப்படுத்தத் தேவைப்படுத்துகின்ற எந்தவொரு நிகழ்வும் அறிக்கைப்படுத்தும் தினத்திற்குப் பின்னர் ஏற்படவில்லை.

2015 மார்ச் 31 உடன் முடிவடையும் வருடத்தக்கான

இலாப நட்டம் தொடர்பான விரிவான கூற்றுக்கள்

	2015 ரூபா	**2014 ரூபா**
கூற்று – i		
விற்பனைப் பெறுமதி		
ஆரம்ப இருப்பு	3,306,054	3,707,000
வருடத்துக்கான உற்பத்திச் செலவு	254,007,898	258,227,330
இறுதி இருப்பு	(14,195,701)	(3,306,054)
விற்பனைப் பெறுமதி	**243,118,251**	**258,628,276**
கூற்று – ii		
நிதிச் செலவுகள்		
வங்கி கட்டணங்கள்	261,179	195,299
நிலுவையிலுள்ள குத்தகை வட்டி	-	36,529

குத்தகை வட்டி	1,579,219	5,713,753
நம்பிக்கைக் கடன் மற்றும் மேலதிகப் பற்றுக்கான வட்டி	6,864,870	1,432,229
	8,705,267	**7,377,810**
கூற்று – iii		
ஏனைய செலவுகள்		
சொத்து அகற்றுதல் இழப்பு	8,572	-
சட்டக் கட்டணங்கள்	96,500	131,500
போக்குவரத்துச் செலவுகள்	229,000	431,000
	334,072	562,500
கூற்று – iv		
நிர்வாகச் செலவு		
பணியாளர் சம்பளம் & மேலதிகப்படி	20,787,907	19,520,723
நிலையியல் சட்ட நன்மைகள் - ஊ.சே.நி & ஊ.ந.நி	2,640,426	2,456,849
பணிக் கொடை	-	95,024
வாடகை மற்றும் வீதங்கள்	3,756,229	3,378,918
ஊழியர் நலன்புரி	1,454,021	884,995
ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களின் கொடுப்பனவுகள்	1,440,467	949,276
தொலைபேசி, தொலைநகல், கூரியர், அஞ்சல்	1,201,898	826,314
வாகன வாடகை	1,035,000	47,500
அச்சிடல் மற்றும் காகிதாதிகள்	571.424	710,757
பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு	456,712	175,412
கணக்காய்வுக் கட்டணம்	-	77,000
சட்டம் & தொழில்வாண்மையாளர் கட்டணம்	239,270	349,500
அறக்கொடை அன்பளிப்பு	252,833	6,600
தேய்மானம்	229,950	131,781
காப்புறுதி	-	233,676
வலு & மின்சாரம்	383,113	225,880
நீர்	118,532	103,949
செயலாளர் செலவுகள்	2,240	425,000
இடர்க் கொடுப்பனவு	-	12,000
பொதுவான செலவுகள்	75,830	13,078
மேலதிகத் தண்டக் கட்டணம்	7,686	-
	34,653,539	30,624,230
கூற்று – v		
விற்பனை மற்றும் விநியோகச் செலவுகள்		
பழுதுபார்த்தல் & பராமரிப்பு – வாகனம்	2,852,571	478,605
வாகனத்துக்குரிய தேய்மானம்	1,659,598	361,330
வியாபார பதவி உயர்வு	1,068,304	400,397
போக்குவரத்து & வாழ்க்கைப்படி	876,628	2,820,904
கண்காட்சிச் செலவு	595,440	-
பொழுதுபோக்குச் செலவு	418,792	770,963
விளம்பரச் செலவு	300,595	1,659,598
போட்டோப் பிரதிக் கடதாசிச் செலவுகள்	7,451	714,340
வெளிநோக்கிய காவுதல் & போக்குவரத்து	-	50,000
	7,779,378	**7,256,138**
கூற்று – vi		
ஏனைய செயற்பாட்டுச் செலவீனங்கள்		
விரயமாகும் பத்திரிகைச் செலவுகள்	3,222,458	2,574,498
	3,222,458	**2,574,498**



National Paper Company Limited
No: 61, Stratford Avenue, Colombo 05